## மாஜி படைவீரர் நல அலுவலகத்தில்

# இரவு நேர காவலர், துப்புரவு பணியாளர் பணிக்கு விண்ணப்பிக்க கலெக்டர் அழைப்பு

**தூத்துக்குடி, செப். 14:** தூத்துக்குடியில் உள்ள முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் இரவு நேர காவலர் மற்றும் துப்புரவு பணியாளராக பணிபுரிய விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கலெக்டர் செந்தில்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை: தூத்துக்குடி, டூவிபுரம் 8வது தெருவில் செயல்பட்டு வரும் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் இரவு நேர காவலர் மற்றும் துப்புரவு பணியாளர் வேலைக்கு ஒரு பணியிடம் காலியாக உள்ளது. இப்பணியிடத்திற்கு அருந்ததியர் இனத்தை சேர்ந்த எழுதப்படிக்க தெரிந்த 18 முதல் 35 வயதிற்குள்ளான பெண் விண்ணப்பிக்கலாம். கல்வி, மாற்றுச்சான்றிதழ் நகல், பதிவுறு மதிப்பெண் பட்டியல் நகல், வேலை வாய்ப்பு பதிவு அட்டை நகல், சாதிச்சான்று நகல், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன் வரும் 20ம் தேதிக்குள் டூவிபுரம் 8வது தெருவில் முன்னாள் படைவீரர் நல அலுவலகத்திற்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.